

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 19.10.2024 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அரசு மணிமண்டபத்தில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் திருவுருவச்சிலை, நீதிக்கட்சியின் வைரத்தூண் சர்.ஏ.டி.பன்னீர் செல்வம் அவர்களின் திருவுருவச்சிலை, ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர் அவர்களின் திருவுருவச்சிலை ஆகியவற்றிற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, மணிமண்டப வளாகத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் ராஜாராமன். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், எம்.பழனியாண்டி, அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் – கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்டம் தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் ஈரோடு தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சட்டமன்ற தொகுதிகளின் பார்வையாளர்கள் ஈரோடு கிழக்கு கழக நெசவாளர் அணி செயலாளர் கே.எம.நாகராஜன், ஈரோடு மேற்கு கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் மீனா ஜெயக்குமார், மொடக்குறிச்சி திண்டுக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஹரிஹரசுதன், பெருந்துரை கழக தகவல் தொழில்நுட்ப அணி இணை செயலாளர் டாக்டர் ஆர்.மகேந்திரன் மற்றும் ஈரோடு தெற்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட , மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (21.10.2024) வழங்கினார். உடன்கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் (பொ) திருமதி.க.ஜெயந்தி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் திருமதி.மாலா ராஜேந்திரதுரை (கறம்பக்குடி), திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இலவச திருமணங்கள்

## திருவாரூரில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி.கலைவாணன் நடத்தி வைத்தனர்!

திருவாரூர், அக்.23-

தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருவாரூர் மாவட்டத்தில் இலவச திருமணங்களை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஆகியோர் நடத்திவைத்தனர்.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்கள் 2024-25ஆம் நிதியாண்டில் 700 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பில் தங்கம் மற்றும் சீர்வரிகளுடன் இலவச திருமணம் நடத்தி வைக்கப்படும் என்கிற அறிவிப்பின்படி, சென்னையில் முதல்வர் அவர்களால் இத்திட்டம் துவக்கிவைக்கப்பட்ட நிலையில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள், மன்னார்குடியில் அருள்மிகு ராஜகோபாலசாமி திருக்கோயிலில் 14இணைகளுக்கு இலவச திருமணங்களை நடத்திவைத்தார்.

அதேபோல நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அருள்மிகு கந்தன் குடி முருகன் கோயிலில் 5 இணையருக்கு சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான பூண்டி. கே.கலைவாணன் திருமணத்தை நடத்திவைத்தார். இருதிருமண நிகழ்வு களிலும் தம்பதியருக்கு அரசு அறிவித்திருந்த தங்கம் மற்றும் சீர்வரிகைள் வழங்கப்பட்டு இந்துசமய முறைப்படி திருமணம் நடத்தி சிறப்புடன் வைக்கப்பட்டது.

மன்னார்குடியில் நடைபெற்ற திருமண நிகழ்வில் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, கழக சட்டத்திருத்தகுழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், அறங்காவல் குழுத்தலைவர் இளவரசன், மன்னை நகர்மன்ற தலைவர் மன்னை.த.சோழ ராஜன், அவைத்தலைவர் க.தன்ராஜ், ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ் செல்வன், நகர செயலாளர் வீரா.கணேசன், ஒன்றிய செயலாளர்கள் வீ.எஸ்.ஆர். தேவதாஸ் , பால.ஞானவேல், டி.எஸ்.டி.முத்துவேல்,சித்தேரி சிவா, நா. கவியரசு, கே.வி.கே. ஆனந்த் பொதுமக்கள் மற்றும் அறங்காவல்துறை அதிகாரிகள்,பொதுமக்கள் பங்கேற்றனர்.

நன்னிலத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள், எஸ். ஜோதிராமன், பிரபாகரன், வே.மனோகரன், கேப்டன் செல்வராஜ், சேகர் கலியபெருமாள், நகர செயலாளர்கள் பக்கிரிசாமி, பேரளம் தியாகு ,நகர்மன்ற தலைவர் ராஜா பக்கிரிசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி குமார், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் பாலமுத்து மற்றும் அறங்கவல்துறை அதிகாரிகள் , பொதுமக்கள் பங்கேற்றனர்.

# வியட்நாம் புதிய அதிபராக ராணுவ தளபதி தேர்வு

ஹனோய், அக்.23-

வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியில் நீண்ட காலமாக தலைவராக இருந்த நூயென் பூ டிரோங்க் மறைவுக்குப் பிறகு டோ லாம் அந்தப் பொறுப்பை ஏற்றார். அவர் அதிபர் பொறுப்பையும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலாளர் பொறுப்பையும் வகித்து வந்தார்.

நூயென் பூ டிரோங்க் மறைவுக்குப் பிறகு அங்கு அரசியல் எழுச்சி ஏற்பட்டு ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளை டோலாம் தீவிரப்படுத்தினார்.

இரண்டு அதிபர்கள், மூன்று துணைப் பிரதமர்கள் உட்பட பெரிய பதவிகளில் இருந்த பலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. வியட்நாமில் அதிபர் பதவி என்பது சம்பிரதாயமான பதவி. கம்யூனிஸ்ட் கட்சி பொது செயலாளர் பதவி சக்தி வாய்ந்த பதவியாகும். அதற்கு அடுத்த நிலையில் அதிபர் உள்ளார். இந்த நிலையில் வியட்நாம் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியது.

இதில்,புதிய அதிபராக லுவோங் குவாங் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ராணுவத்தில் தளபதியாக பணியாற்றியுள்ளார்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவெண்ணைய் நல்லூர் கிழக்கு ஒன்றியம் டி.கொளத்தூர் ஊராட்சியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நியாய விலைக் கடை, அங்கன்வாடி மையத்தில் குடிநீர் வசதியை தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினரும்,வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவருமான ஆ.ஜெ. மணிக்கண்ணன் எம்.எல்.ஏ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைத்தார்,இதில் ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.சி. சந்திரன்

### அக்டோபர் 23 (2006)



தனது இளமைக் காலத்திலிருந்தே கழகப் பணியில் ஈடுபட்டு, அம்பத்தூர், முகப்பேர் பகுதிகளில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

அம்பத்தூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

“முகப்பேர் பகுதியில் கழகத்தை வளர்ப்பதில் வளர்பிறை சந்திரன்” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

மேல்மலையனூர் ஒன்றியம்.மல்லாண்டியில்

# ரூ 14.31லட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ .திறந்து வைத்தார்!

செஞ்சி, அக்.23-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் தென்பாலை ஊராட்சி மல்லாண்டி கிராமத்தில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 14.31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார் .ஒன்றிய கவுன்சிலர் கலா நாராயண மூர்த்தி முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 14.31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மைய கட்டிடத்தினை திறந்து வைத்து பெயர் பலகையை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நாராயண மூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய பொறியாளர் ராதா, பணி மேற்பார்வையாளர் பார்த்திபன்,ஒன்றிய பொருளாளர் கோபாலகிருஷ்ணன் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஜி.பி.எஸ். முருகன், கிளை நிர்வாகிகள் அண்ணாதுரை, அண்ணாமலை, ஏழுமலை, பூபாலன், மணி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.ஆர். கோவிந்தன்

### அக்டோபர் 23 (2021)



தனது இளமைக் காலத்திலிருந்தே தீவிரமாக கழகப் பணியில் ஈடுபட்டு வந்தவர்.

சென்னை, அண்ணா நகர் பகுதியில் மாவட்ட பிரதிநிதி, வட்டச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

2006ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கங்காதீஸ்வரர் கோவில் அறங்காவலர், புரசைவாக்கம் கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தி நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு எட்டு முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.